**DEPOSITION OF WITNESS**

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 386/2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | P.W.1 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஆனந்தராஜ் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | குணசேகரன் | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 20.08.2025.

முதல் விசாரணை

நான் வடபூதானம் சுண்டக்காம்பாளையத்தில் வசித்து வருகிறேன். உடுமலை பழைய பேருந்து நிலையத்தின்அருகில் உள்ள காளியம்மன் அன் கோவில் விற்பனை பிரதிநிதியாக வேலை செய்து வருகிறேன். காலையில் 9.00 மணிக்கு கடை திறந்து இரவு 9.00 மணிக்கு கடையை பூட்டி சாவியை மெய்ஞானமூர்த்தி எடுத்து கொண்டு செல்வார். காலையில் சாவியை நான் வாங்கி வருவேன். கடந்த 03.04.2025 ம்தேதி இரவு உரிமையாளர் பூட்டிவிட்டு சென்று விட்டார். மறுநாள் கடையை திறக்க 04.4.2025 ம் தேதி நானும் சங்கர் என்பவரம சென்று ஓனரிடம் சாவியை வாங்கி வந்த கடையை திறந்தோம். கடையை திறக்க முயற்சித்த போது கடையின் சட்டர் ஏற்கனவே திறந்து கிடந்தது. உடனடியாக ஓனருக்கு போன் மூலும் தகவல் சொன்னோம். அவரும் அவர் தம்பியும் வந்தார்கள். என்ன என்ன திருடு போனது என்று பார்த்த போது கல்லா பெட்டியில் ரூ. 19000/- பணமும், கஸ்டமருக்கு அன்பளிப்பு கொடுப்பதற்காக வைத்திருந்த தஙகம் மற்றும வெள்ளி பொருட்க ளில் 158 எண்ணிக்கையிலான தங்க காசுகள் 2 பவுன் மதிப்பிலும் தலா வெள்ளி 1.00 கிராம் மதிப்பில் 75 காசுகளும் திருடு போயிருந்தது. பின்னர் கடை

முழுவதும் சோதனை செய்தோம்.பின்னர் கடையில் இருந்த சிசிடிவி கேமராவை பார்த்த போது அதிகாலை 1.00 மணியளவில ஏறி குதித்து உள்ளே வந்து முதல் தளத்திற்கு சென்று பிரிட்ஜ் ரூமில் திறக்க முயற்சி செய்தவர் அதை திறக்க முடியாததால் மீண்டும் இருமபு ராடு எடுத்து கொண்டு வந்தவர் சட்டரை உடைத்து தங்க மற்றும் வெள்ளி காயின்களை திருடி அதிகாலை 2.30 மணிக்கு மேல் வெளியே செல்வதை பார்த்தோம். இது சம்பந்தமாக நாங்கள் எஙகள் ஓனருடன் சென்று புகார் கொடுத்தோம். சிசிடிவி கேமராவில் பார்த்த நபரை என்னால் அடையாளம் காட்ட இயலும் . ஆஜர் எதிரி தான் அவர். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. சம்பவத்தை பற்றி நேரடியாக தெரியாது என்றால் தெரியும். உங்கள் போலிசார் விசாரணையில் யாரோ ஒரு நபர் என்று சொல்லியிருந்தால் அது தவறு என்றால் ஆமாம். அசா.1 உங்கள் ஓனர் என்பதால் எதிரிக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறிர்கள் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakala, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 386/2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | P.W.2 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முகேஷ்குமார் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | தனபாலன் | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 20.08.2025.

முதல் விசாரணை

நான் குமரலிங்கத்தில் வசித்து வருகிறேன். உடுமலை பழைய பேருந்து நிலையத்தின் தளி சிக்னல் அருகில் உள்ள காளியம்மன் அன் கோவில் விற்பனை பிரதிநிதியாக வேலை செய்து வருகிறேன். வேலை செய்து வருகிறேன். கடந்த 04.04.2025 ம் தேதி முந்தைய நாள் கடையில் வந்து திருட்டு போனது. சர்வீஸ் பணம் ரூ. 18,000/- பணமும், வாடிக்கையாளர்களுக்கு அன்பளிப்பாக கொடுப்பதற்காக வைத்திருந்த தங்க மற்றும் வெள்ளி காசுகள் ஆகியவற்றை திருடி சென்றுவிட்டதகா சொனனார்கள். பின்னர் போலிசார் சம் பவ இடத்திற்கு வந்து பார்த்து எங்களிடம் கேட்டார்கள். சிசிடிவி கேமராபதிவை பார்த்தார்கள். பக்கத்து கடை விவரங்கள் கேட்டு வரைபடம் கேட்டார்கள். அதற்கு ஆதரவாக சாட்சி கையொப்பம கேட்டார்கள். நானும் ஜெகநாதனும் சாட்சி கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையது தான். பார்வை மகசர் அசா.ஆ.1 என குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

1. நீங்கள் கையெழுத்து போட்ட ஆவணத்தில் உள்ள விவரம்

முழுமையாக தெரியாது என்றால் தெரியும். எத்தனை மணிக்கு உங்கனளை போலிசார விசாரித்தார்கள் என்றால் 11.00–12.00 மணி மேப் போடும் போது விசாரித்தார்கள். படம வரைந்ததில் தான் கையெழுத்து செய்திர்கள் என்றால் ஆமாம். காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்து புகார்தாரர் உங்கள் ஓனர் என்பதால் எதிரிக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறிர்கள் என்றால் சரியல்ல. கையெழுத்து போட்ட ஆவணத்தில் உள்ள விவரம் தெரியும் என்று சொல்லியுள்ள நிலையில் சம்பவ இடத்தில் இருந்து வடக்கே 20 அடி துாரத்தில் என்ன உள்ளது என்றால் சிக்னல் உள்ளது

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakala, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 386/2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | P.W.3 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜெகநாதன் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | சக்திவேல் | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on20.08.2025.

<u>முதல் விசாரணை</u>

நான் இந்திராநகரில் வசித்து வருகிறேன். நான் உடுமலை பழைய பேருந்து நிலையத்தின் தளி சிக்னல் அருகில் உள்ள காளியம்மன் அன் கோ– ல் டிரைவராக வேலை செய்து வருகிறேன். வேலை செய்து வருகிறேன். கடந்த 04.04.2025 ம் தேதி முந்தைய நாள் கடையில் வந்து திருட்டு போனது. சர்வீஸ் பணம் ரூ. 19,000/– பணமும், வாடிக்கையாளர்களுக்கு அன்பளிப்பாக கொடுப்பதற்காக வைத்திருந்த தங்க –158 காயின் மற்றும் வெள்ளி –75 காசுகள் ஆகியவற்றை திருடி சென்றுவிட்டதாக சொனனார்கள். பின்னர் போலிசார் சம் பவ இடத்திற்கு வந்து பார்த்து எங்களிடம் கேட்டார்கள். எது எது எங்கு உள்ளது என்று கேட்டார்கள். விசாரித்து விவரங்கள் கேட்டு வரைபடம் கேட்டார்கள். அதற்கு ஆதரவாக சாட்சி கையொப்பம கேட்டார்கள். நானும் ஜெகநாதனும் சாட்சி கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான்.போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. கையெழுத்து போட்ட ஆவணத்தில் உள்ள விவரம் தெரியாது

என்றால் படித்து பார்த்து தான் போட்டேன். போலிசார் எங்க வைத்து எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்றால் இரவு 10.30 மணிக்கு கடையில் வைத்து விசாரித்தார்கள். போலிசார் படம்வரைந்ததில் தான் கையெழுத்து செய்திர்கள் என்றால் ஆமாம். என்ன படித்துள்ளிர்கள் என்றால் 12 ம் வகுப்பு. படித்து பார்த்து கையெழுத்து போட்டதாக சொல்லியுள்ளநிலையில் சம்பவ இடத்திலிருந்து 40 அடி வடக்கே என்ன உள்ளது என்றால் மரக்கடை குடோன் உள்ளது. காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்து புகார்தாரர் உங்கள் ஓனர் என்பதால் எதிரிக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறிர்கள் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakala, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No.386/2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | P.W.4 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மணிபாரதி | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | சின்னசாமி | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on20.08.2025.

முதல் விசாரணை

நான் சின்ன வீரன்பட்டியில் வசித்து வருகிறேன். அரசு கட்டிட காண்டிராக்டராக வேலை செய்து வருகிறேன். கடந்த 14.05.2025 ம் தேதி நானும் என் நண்பர் கௌரிநாதனும் வீட்டிற்கு செல்ல வேண்டி எனது பைக்கில் சின்னவீரன்பட்டி காளியம்மன் கோவில் அருகில் வந்த போது போலிசார் கூட்டமாக இருந்தார்கள் என்ன என்று போய் பார்த்த போது திருட்டில் ஈடுபட்ட ஒரு நபரை பிடித்து வைத்திருந்தார்கள். பிடித்த நபரை விசாரிக்கும் போது அஸ்கர் பாட்ஷா தனது பெயர் என்று கூறி காளியம்மன் அன் கோ கடையில் 158 தங்க காசுகளையும் 75 வெள்ளி காசுகளையும் மற்றும் பணம் ரூ. 19,000/- கடைக்குள் புகுந்து திருடியதை ஒப்புக் கொண்டார். அவர் திருடிய தங்க மற்றும வெள்ளி காசுகளை ஆஜர் செய்தார். அவர் எங்கிருந்து எடுத்தார் என்று கவனிக்கவில்லை. காவல் நிலையம் சென்று பார்த்தோம். பணம் என்ன ஆனது என்று எனக்கு தெரியாது. அவர் என்ன சொன்னார் என்று தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையது தான். கையெழுத்து மட்டும் அசா.ஆ.2 என குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள

1 வது கையெழுத்து என்னுடையது தான். கைப்பற்றுதல் மகசர் அசா.ஆ.3 என குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. கையெழுத்து போட்ட ஆவணத்தில் உள்ள விவரம் தெரியாது என்றால் அவர் கொடுத்த வாக்குமூலத்திலும். பறிமுதல் செய்த விவரத்திலும் கையெழுத்து செய்தேன். புகார்தாரர் மெய்ஞானமூர்த்தி உங்களுக்கு தெரிந்துவர் என்றால் சரிதான். எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் காவல் நிலையத்தில் வைத்து எழுதப்பட்டது என்றால் சம்பவ இடத்தில் எடுக்கப்பட்டது ஆனால்ர அங்கு கூட்டம் நிறைய ஆனதால் பக்கத்தில் எங்களுக்கு தெரிந்த கடையில் வைத்து எடுககப்பட்டது. ஒப்புதல் வாக்குமூலத்தை யார் டைப் செய்தார்கள் என்றால் தெரியும், தற்போது பெயர் ஞாபகம் இல்லை. எங்கு வைத்து பிரிண்ட் எடுக்கப்பட்டது என்றால் கடையில் வைத்து டைப் செய்து காவல் நிலையம் வந்து பிரிண்ட் எடுக்கப்பட்டது. காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்திர்கள் என்றால் ஆமாம். புகார்தாரர் மெய்ஞானமூர்த்தி தெரிந்தவர் என்பதால் எதிரிக்கு எதிராக பொய்யாக சாட்சியம் சொல்கிறிர்கள் என்றால் சரியல்ல. எதிரியிடம் இருந்து எந்த பொருளும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakala, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.